**சிலுவைப்பாதை**

**முன்னுரை:** இறை இயேசுவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே உங்கள் அனைவரையும் இந்த சிலுவைப்பாதை தியானத்திற்கு அன்புடன் வரவேற்கிறோம்.

சிலுவைப் பாதை நம்மை இயேசுவின் பாடுகளோடு இணைக்கும் அன்பின் வழி. இந்த அன்பின் வழியில் நடந்து இறை தந்தையின் இரக்கத்தை அனுபவிக்க இந்த சிலுவைப் பாதை நமக்கு உதவட்டும். 'நான் உங்களுக்கு மாதிரி காட்டினேன், நீங்களும் அவ்வாறே செய்யுங்கள்' (யோவான் 13:15) என்ற இயேசுவின் மொழிகள் நம் காதுகளில் ஒலிக்கட்டும். அவர் காட்டிய மாதிரியைப் பின்பற்றி வாழ்ந்து மரித்தாலும் இன்னும் தங்களுடைய புனிதத்தால் வாழ்ந்து கொண்டிருக்கும் புனிதர்களை நினைவுகூர்வோம். 'இவராலும் அவராலும் முடியுமென்றால், ஏன் என்னால் முடியாது' என்று சபதமேற்று தானும் அவ்வாறே புனிதரானோரை பின்பற்றுவோம்.

நாமும் பாவம் துறந்து புனிதராக வாழவும், புனிதர்களின் உறவில் நமது நம்பிக்கையைப் புதுப்பிக்கவும் சிலுவையின் ஆற்றலையும் அருள்பொழிவையும் உணரவேண்டி செபிப்போம். 'என் பின்னே வாருங்கள்' (மத்தேயு 4:19) என்று இயேசு நம் முன்னே நடந்து செல்கின்றார். அவர் பின்னே செல்வோமா?

**முதல் நிலை:** இயேசு தீர்ப்பிடப்படுகிறார்.

***ஒரு:*** திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.
***எல்:*** ஏனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

**இறைவார்த்தை:** என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே! மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில், விண்ணுலகில் உங்களுக்கு கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். இவ்வாறே உங்களுக்கு முன்னிருந்த இறைவாக்கினர்களையும் அவர்கள் துன்புறுத்தினார்கள். (மத்தேயு 5:11-12)

**சிந்தனை: புனித ஜோன் ஆஃப் ஆர்க்**

ஆண்டவர் இயேசு குற்றமற்றவராய் இருந்தும் மாசுமறுவற்ற அவர், நமக்காக, நம் பாவங்களுக்காக அநியாயமாக சிலுவை சாவுக்கு தீர்ப்பிடப்பட்டார். முப்பது வெள்ளி காசுக்கு விற்கப்பட்ட இயேசுவைப் போல் தன் நாட்டவருக்காக விடுதலை தேடி தந்ததற்காக பகைவரிடம் விற்கப்பட்ட ஒரு இளம் பெண் தான் புனித ஜோன் ஆஃப் ஆர்க். தான் செய்த நன்மைக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டவர்.

1412 ஆம் ஆண்டு ஃப்ரான்ஸ் தேசத்தில் பிறந்த புனித ஜோன் ஆஃப் ஆர்க் 12 வயது முதல் புனித மிக்கேல், புனித கேத்தரின், புனித மார்கரேட் ஆகியோரின் (குரல் வழி) செய்திகளை கேட்டு வந்தாள். தனது 13 ஆம் வயதில் தன் தந்தையின் பண்ணையில் வேலை செய்துகொண்டிருந்த போது புனித மிக்கேல், புனித கேத்தரின், புனித மார்கரேட் ஆகியோரை காட்சியில் கண்டார். இவர்கள் ஜோன் ஆஃப் ஆர்க்கிடம் ஆங்கில ஆதிக்கத்திலிருந்து ஃப்ரான்ஸ் பகுதிகளை விடுவிக்க கட்டளையிட்டனர்.

இந்தக் கட்டளைக்கு கீழ்ப்படிந்து ஜோன் ஆஃப் ஆர்க் நூற்றாண்டுப் போர் என்றழைக்கப்பட்ட சண்டையின் போது ஃப்ரான்ஸ் படைகளை தலைமையேற்று நடத்தி, இங்கிலாந்திடமிருந்து ஃப்ரான்ஸ் நகர்களான ஓர்லயன்ஸ் மற்றும் ட்ரோய்சை மீட்டார். இந்த வெற்றி ஏழாம் சார்லஸ் ஃப்ரான்ஸ் அரசராக முடிசூட காரணமாய் இருந்தது.

இந்த வெற்றி கிடைத்த ஓராண்டிற்குப் பிறகு, ஜோன் ஆஃப் ஆர்க் மாய வித்தைக்காரி என்ற குற்றச் சாட்டுடன் இங்கிலாந்து அரசிடம் விற்கப்பட்டார். அவர் தமது சமூக வழக்கத்திற்கு எதிராக ஆண்களின் ஆடை அணிந்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டார். ஜோன் ஆஃப் ஆர்க் ஃப்ரான்சுக்கு பெற்றுத் தந்த வெற்றி முறையற்றது என்று குற்றம் சாட்டப்பட்டு 1431 ஆம் ஆண்டு உயிரோடு எரிக்கப்பட்டார். அவர் இறந்து 25 ஆண்டுகளுக்குப் பின்னர் இங்கிலாந்து திருச்சபை இரண்டாவது முறையாக ஒரு விசாரணைக்கு ஆணையிட்டது. அரசியல் அழுத்தம் காரணமாகவே ஜோன் ஆஃப் ஆர்க் குற்றம் சாட்டப்பட்டாரேயன்றி அவர் உண்மையில் குற்றமற்றவர் என அந்த நீதிக் குழு முதல் தீர்ப்பை திருத்திக் கூறியது.

**செபம்:** இயேசுவே, இன்றைய இளைய சமூகத்திடம் உள்ள நன்மைத்தனங்களை, ஆற்றல்களை, திறமைகளை, கண்டுபிடித்து ஊக்குவித்து வளர்க்கக்கூடிய ஆன்மீகத் தலைவர்களையும், சமூகத் தலைவர்களையும் நண்பர்களையும் உறவுகளையும் தந்து ஆசீர்வதியும். ஒரு வேளை தாங்கள் செய்யக்கூடிய நன்மைகளுக்காக தீர்ப்பிடப்பட்டால் அதை தாங்கிகொண்டு தொடர்ந்து அந்த நன்மைத்தனத்தில் நிலைத்திருக்க அவர்களை ஆசீர்வதியும். அவர்களது தோற்றத்தை, பழக்க வழக்கங்களைப் பார்த்து தவறாக தீர்ப்பிட்டு கண்டனம் செய்வதற்காய் மனம் வருந்துகிறோம். ஆண்டவரே, ஜோன் ஆஃப் ஆர்க்கைப் போல உண்மைக்காகவும் நன்மைக்காகவும் இறுதி வரை போராடும் மன வலிமையையும் ஆன்ம பலமும் தந்து அவர்களை ஆசீவதியும். ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும், இயேசுவே, எங்கள் மேல் இரக்கமாயிரும்

மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாருவார்களாக. ஆமென்.

**இரண்டாம் நிலை:** இயேசுவின் மீது சிலுவை சுமத்தப்படுகிறது

***ஒரு:*** திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து .......
***எல்:*** ஏனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு ........

**இறைவார்த்தை:** ஏனெனில் கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொள்வதற்கு மட்டும் அல்ல, அவருக்காகத் துன்பங்களை ஏற்பதற்கும் நீங்கள் அருள் பெற்றுள்ளீர்கள். (பிலிப்பியர் 1:29)

**சிந்தனை: புனித ஜெர்மன் குசின்**

இயேசுவோடு சேர்ந்து தன் வாழ்வின் சிலுவைகளை சுமந்து புனிதரானோர் ஏராளம் பேர் திருச்சபையில் உண்டு. அத்தகைய புனிதையருள் ஒருவர் தான், தன் வாழ் நாள் முழுவதும் நோய், புறக்கணிப்பு, பட்டினி, போன்ற சிலுவைகளை மகிழ்வுடன் ஏற்று, புனிதப் பாதையில் நடந்த புனித ஜெர்மன் குசின்.

தமது இளம் வயதிலேயே தன்னைப் பெற்ற தாயை இழந்த ஜெர்மன் குசின், அவரது சிற்றன்னையால் பலவிதத் துன்பங்களுக்கு ஆளானார். மிகக் குறைந்த,

அதுவும் வேண்டாமென்று ஒதுக்கப்பட்ட, மிச்சம் மீதமிருந்த உணவே ஜெர்மனுக்குக் கொடுக்கப்பட்டது. பிறவியிலேயே தனது வலது கரம் வளைந்து செயலிழந்த நிலையில் பிறந்த ஜெர்மன், அதன் காரணமாகவே ஆட்டுக்கொட்டிலில் விடப்பட்டார். கால்களில் கொதிக்கும் வென்னீர் ஊற்றியும் சாக்கடையில் தள்ளி விட்டு அப்படியே அங்கேயே மூன்று நாள் கிடக்கவிட்டும் அவரைக் கொடுமைப்படுத்தினார் அவரது சிற்றன்னை. அவருடைய சிற்றன்னைக்குப் பிறந்த பிள்ளைகளும் அவரைக் கொடுமைப்படுத்தினர். இந்த சூழ்நிலையில் ஜெர்மன் ஒருவித எலும்புருக்கி நோயால் பாதிக்கப்பட்டார். இதன் விளைவாக அவரது கழுத்தைச் சுற்றிலும் கட்டிகள் தோன்றின. ஆயினும் அவருக்கு இரக்கம் கிடைக்கவில்லை.

இவ்வளவு துன்பத்திலும் நோயிலும் ஆடு மேய்க்கச் செல்லும்படி அவரது சிற்றன்னை கட்டளையிட்டார். ஆடுகளைத் தாக்க வரும் ஓநாய்களால் ஜெர்மன் கொல்லப்பட வேண்டும் என்பதே அவருடைய நோக்கம். ஆனால் ஜெர்மன் இவை அனைத்தையும் இறைவனின் திருவுளம் என எண்ணி பொறுமையோடு ஏற்றுக் கொண்டார். தனது சிற்றன்னையின் மனமாற்றத்திற்காக தன் துன்பங்களை எல்லாம் ஒப்புக்கொடுத்தார். ஆடு மேய்க்கச் செல்லும் போது தனது காவல் தூதரின் பாதுகாப்பில் ஆடுகளை விட்டு விட்டு தினசரி திருப்பலிக்கு சென்று வந்தார். அவர் வரைந்த ஒரு வட்டத்தை விட்டு ஆடுகளும் வெளியே வரவில்லை, ஓநாய்களும் உட்புகவில்லை. இதைப் பார்த்து மக்கள் ஜெர்மன் குசினை ஒரு புனிதை என்றே போற்றத் தொடங்கினர்.

ஒரு குளிர் காலத்தில் தனது ஆடையில் உணவைத் திருடிச் செல்வதாகக் கூறி அவரது சிற்றன்னை அவரை அடித்தார். அப்போது ஜெர்மன் தன் ஆடையை கீழே விட, மணம் மிகுந்த ரோஜா மலர்கள் கீழே விழுந்தன. அவரது சிற்றன்னை இந்த பனிக்காலத்தில் ரோஜா மலர்கள் வந்தது எப்படி என அதிசயித்தார். ஜெர்மன் குசினோ அதில் ஒரு ரோஜா மலரை எடுத்து அவரது கையில் கொடுத்து ஆண்டவரது இரக்கத்தின் அடையாளமாக இதை வைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

மனம் வருந்தி திருந்திய சிற்றன்னை தன்னோடு வந்து தங்குமாறு ஜென்மனை அழைத்தார். ஆனால், ஜெர்மனோ மறுத்துவிட்டார். தனது 22 ஆம் வயதில் ஆட்டுக் கொட்டிலில் அவர் மரணமடைந்தார். ஊருக்கு வெளியே இருந்த இரு துறவிகள் ஆட்டுக் கொட்டில் இருந்த திசையில் விண்ணக ஒளி இறங்கி வருவதை கண்டு, அங்குச் சென்று, இறந்த ஜெர்மன் குசின் உடலை அடக்கம் செய்தனர். சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகு அதே கல்லறையில் வேறொருவரை அடக்கம் செய்யத் தோண்டிய பொழுது ஜெர்மன் குசினின் உடல் அழியாமல் இருந்தது.

''நாம் இவ்வுலகில் அனுபவிக்கும் துன்பங்கள், விண்ணகத்தில் வெளிப்படப் போகும் மாட்சியோடு ஒப்பிடும் போது ஒன்றுமில்லை'' (உரோமயர் 8:18) என்கிற புனித பவுலடியாரின் வார்த்தைகளுக்கு சான்றாக திகழ்கிறார் புனித ஜெர்மன் குசின்.

**செபம்:** அன்பு இயேசுவே, இன்றைய இளைய தலைமுறையினர் எதிர் கொள்ளும் சிலுவைகள் எத்தனை எத்தனையோ. வறுமை, வேலை வாய்ப்பின்மை, கல்வி கற்க இயலாமை, வாய்ப்பில்லாமை, இதனால் எதிர் கொள்ளும் ஏற்றத்தாழ்வுகள், தோற்றம், நிறம், சமூக அந்தஸ்து இவற்றால் வாய்ப்புக்கள் மறுக்கப்படுகிற நிலை, எழும் விமர்சனங்கள், அமைதியற்ற குடும்ப சூழல், இன்னும் எத்தனையோ. இவைகளால் நொந்து வருந்துகின்ற இவர்களை உம் சிலுவையோடு சேர்த்து ஒப்புக்கொடுக்கிறோம். இந்தத் துன்பமெல்லாம் சில காலமே என்ற உண்மை அவர்களைத் திடப்படுத்துவதாக. கடந்தவற்றை மறந்து வருபனவற்றை கருத்தில் கொண்டு,

உம்மையும் உம்மைப் பின்பற்றி வாழ்ந்த ஜெர்மன் குசினையும் தங்கள் கண்முன் கொண்டு பொறுமையோடும் விடா முயற்சியோடும் வாழ வரம் தாரும். ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும், இயேசுவே, எங்கள் மேல் இரக்கமாயிரும்
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் .......

**மூன்றாம் நிலை:** இயேசு முதல் முறை தரையில் விழுகிறார்.

***ஒரு:*** திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து .......
***எல்:*** ஏனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு ........

**இறைவார்த்தை:** மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்? (மத்தேயு 16:26)

**சிந்தனை: புனித பிரான்சிஸ் சவேரியார்**

பாரீஸ் நகரத்தில் புகழ்பெற்ற தத்துவ ஆசிரியராக பணிபுரிந்து வந்த 24 வயதுடைய இளையவர் புனித பிரான்சிஸ் சவேரியார். இவரைக் காணும் போதெல்லாம் ''ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் அவனுடைய ஆன்மாவை இழந்துவிட்டால் அதனால் வரும் பயனென்ன'' என்ற இறைவார்த்தையை புனித லயோலா இஞ்ஞாசியார் கூறி வந்தார். புகழ் பெற்ற தத்துவப் பேராசிரியராக சிறந்து விளங்கவேண்டும் என்ற கனவுடன் இருந்த சவேரியாரை இந்த இறைவார்த்தை மாற்றியது. கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள அனைத்தையும் குப்பை என உதறிய புனித பவுலடியாரைப் போல தனது உலகப் போக்கிலான கனவுகளில் விழுந்து கிடந்த சவேரியாரும் அவற்றை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு இயேவுக்காக, ஆன்மாக்களுக்காக தன் வாழ்வை ஒப்புக்கொடுத்து இயேசு சபையில் தன்னை இணைத்துக் கொண்டார்.

1537 இல் தனது குருப்பட்ட திருநிலைப்பாட்டிற்குப் பிறகு மறைபரப்பு பணிக்கென இந்தியாவிற்கு வந்தார். அடுத்த பத்து ஆண்டுகள் அயராது உழைத்து, நற்செய்தி அறிவித்து பல ஆயிரம் மக்களை மனந்திருப்பினார். ஏழைகளோடு ஏழையாக வாழ்ந்து, நோயாளிகளுக்கு, சிறப்பாக தொழு நோயாளிகளுக்கு பணி புரிந்தார். மலேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளிலும் இயேசுவை அறிவித்து, சீனாவிற்குச் செல்ல விரும்பி கப்பல் பயணம் மேற்கொண்ட போது நோயுற்று இறந்தார். இவ்வுலக ஆடம்பரங்களிலும் புகழிலும் விழுந்து கிடந்த நிலையிலிருந்து எழுந்து இயேசுவையும் அவருக்காக ஆன்மாக்களையும் சொந்தமாக்கிக் கொண்டார் புனித சவேரியார்.

**செபம்:** அன்பு இயேசுவே, தனது வாழ்க்கையின் இளம் பருவத்தில் இவ்வுலக ஆடம்பரங்களில் விழுந்து கிடந்த புனித சவேரியாரைப் போன்று, தொலைத் தொடர்பு சாதனங்கள், போலியான காதல் கவர்ச்சிகள், ஆடம்பரங்கள், உல்லாசங்கள் போன்ற அடிமைத்தனங்களில் வீழ்த்தப்பட்ட எம் இளம் உள்ளங்களைக் கருணைக் கண் கொண்டு பாரும். நீர் முதல் முறையாக விழுந்த போது சிந்திய திரு இரத்தத்தால் இத்தகைய அடிமைத்தனத்தில் இருந்து இவர்களை மீட்டருளும். ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும், இயேசுவே, எங்கள் மேல் இரக்கமாயிரும்
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் .........

**நான்காம் நிலை:** இயேசு தன் தாயை சந்திக்கிறார்.

***ஒரு:*** திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து .......
***எல்:*** ஏனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு ........

**இறைவார்த்தை:** சொல்லாலும் செயலாலும் உங்கள் பெற்றோரை மதியுங்கள், ஆப்பொழுது உங்களுக்கு அண்டவரின் ஆசி கிடைக்கும். (சீராக் 3:8)

**சிந்தனை: வணக்கத்துக்குறிய லௌரா விக்கோனா**

வணக்கத்துக்குறிய லௌரா விக்கோனா சிறு வயதிலேயே தந்தையை இழந்தார். விதவையான அவரது தாய் மெர்சிடிஸ், மனுவேல் மோரா என்பவரது பண்ணையில் வேலைக்கு சேர்ந்தார். பலவித தீய பழக்கங்கள் கொண்ட மனுவேல், மெர்சிடிஸ் மற்றும் அவரது இரண்டு மகள்களுக்கும் ஆதரவளிப்பதாகவும் அவர்களின் கல்வி மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கு உதவி செய்வதாகவும் வாக்களித்தார். அதற்கு ஈடாக, திருமணத்திற்குப் புறம்பான ஒரு உறவை தன்னோடு வைத்துக்கொள்ள வேண்டும் என்றார். வேறு வழியில்லாமல் லௌராவின் தாய் அதை ஏற்றுக்கொண்டார். பிள்ளைகள் இருவரும் ஜீனைன் என்ற இடத்தில் புனித தொன் போஸ்கோவின் சலேசிய சபை சகோதரர்களால் நடத்தப் பட்ட பள்ளியில் சேர்க்கப்பட்டனர். அங்கு விடுதியில் தங்கிப் படித்து வந்தனர். லௌரா இந்த வாய்ப்புக்காக இறைவனுக்கு நன்றி கூறினார். தானும் ஒரு துறவு வாழ்வு மேற்கொள்ள ஆசை கொண்டார். ஆனால் தங்களது தாயின் நிலைக்காக மனம் வருந்தினர். லௌராவின் தாய் ஏறக்குறைய கடவுளை விட்டே விலகிவிட்டார்.

''ஆண்டவரே, என் தாய் உம்மை அறிந்து அன்பு செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். அன்பு சாவை விட வலிமை வாய்ந்தது அல்லவா? அன்பு பழமையானவற்றை புதுப்பிக்கவும், இல்லாதவற்றை புதிதாக படைக்கவும் ஆற்றல் கொண்டதல்லவா? எனவே, உம் அன்பால் என் அன்னையை புதுப்பிக்கவும், புதுப்படைப்பாக்கும் படி என்னையே பலியாக ஒப்புக் கொடுக்கிறேன்'' என்று செபித்தார். 1903 ஆம் ஆண்டு, தனது 13 ஆம் வயதில் லௌரா கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். அவரது தாய்க்கு அறிவிக்கப்பட, அவர் வந்து லௌராவை தனது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். அந்த இடத்தில் இனிமையான கால சூழ்நிலையோ, அன்னையின் அன்பான கவனிப்போ எதுவும் லௌராவிற்கு சுகம் தரவில்லை. கடவுள் தன் பலியை, தியாகத்தை ஏற்றுக் கொண்டதை அவள் புரிந்துகொண்டால். 'அம்மா நான் இறந்து விடுவேன். உங்கள் மனமாற்றத்திற்காக என் உயிரை கையளிக்கிறேன். என் பலி ஏற்றுக் கொள்ளப்ப்ட்டதற்காய் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்' என்ற தன் தாயிடம் தன் இரகசியத்தை வெளிப்படுத்தினாள். லௌராவின் தாய் இதைக் கேட்டு மனம் வெதும்பி அழுதார். மனம் திருந்தி கடவுளுக்கு உகந்த வாழ்வு வாழ்வேன் என்று லௌராவிடம் வாக்களித்தார். தனது 13 ஆம் வயதில் லௌரா விண்ணகம் சேர்ந்தார்.

**செபம்:** இனிய இயேசுவே, உம் தாயை நீர் மிகவும் நேசித்தீரே. நாங்களும் எங்கள் பெற்றோரை அன்பு செய்யக் கற்பித்தீர். ஆனால், பெற்றோரை முட்டாளாக நினைப்பதும், நடத்துவதும், அவர்களது தியாகத்தைப் புரிந்துகொள்ளாமல், மதிக்காமல் தான் தோன்றித் தனமாக வாழுகின்ற ஒவ்வொரு இளையோரையும் ஒப்புக்கொடுக்கிறோம். தங்கள் பெற்றோரின் கண்ணீருக்குக் காரணமான இவர்களை மன்னியும். பெற்றோரை மதித்து அவர்களிடம் காணப்படும் குற்றம் குறைகளைப் பொறுத்துக் கொண்டு வணக்கத்துக்குரிய லௌரா விக்கொன்னாவைப் போல பெற்றோரை அன்பு செய்து வாழ வரம் தாரும். ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும், இயேசுவே, எங்கள் மேல் இரக்கமாயிரும்
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் .........

**ஐந்தாம் நிலை:** சீரேனே ஊர் சீமோன் இயேசுவுக்கு துணை செய்கிறார்.

***ஒரு:*** திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து .......
***எல்:*** ஏனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு ........

**இறைவார்த்தை:** மேலும் ''யாரை நான் அனுப்புவேன்**?** நமது பணிக்காக யார் போவார்**?**'' என வினவும் என் தலைவரின் குரலை நான் கேட்டேன். அதற்கு, ''இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்'' என்றேன். (எசாயா **6**:**8**)

**சிந்தனை: புனித பவுஸ்தினா கொவால்ஸ்கா**

ஹெலன் என்ற இயற்பெயர் கொண்ட புனித பவுஸ்தினா கொவால்ஸ்கா, தனது **19** ஆம் வயதில் தனது தங்கையுடன் ஒரு நடன நிகழ்ச்சிக்கு சென்றார். அங்கே அவர் நடனமாட முயன்ற போது துன்புறும் இயேசுவைத் தன் முன் கண்டார். மிகுந்த துயரத்துடன் உடனே அவ்விடத்தை விட்டு நீங்கி தேவாலயம் சென்றார். அங்கு செபித்துக் கொண்டிருந்த போது, உடனே தன் வீட்டை விட்டு புறப்பட்டு வார்சாவுக்கு சென்று, ஒரு துறவற மடத்தில் சேர இயேசு அவளிடம் கூறினார். இயேசுவின் குரலுக்கு கீழ்ப்படிந்த பவுஸ்தினா அங்கிருந்து **85** மைல் தொலைவிலிருந்த, தான் இதுவரை அறிந்தே இராத வார்சாவுக்குப் புறப்பட்டார். அவருடைய பெற்றோருக்கோ, வேறு யாருக்குமோ இது பற்றி எதுவும் தெரியாது. தான் அனிந்திருந்த உடையைத் தவிர வேறெதுவும் அவரிடம் இல்லை. வார்சா சென்றவுடன் ஆண்டவரால் வழி நடத்தப்பட்டு புனித யாகப்பர் ஆலயத்திற்குச் சென்றார். திருப்பலிக்குப் பின் அங்கிருந்த பங்குத் தந்தயைக் கண்டு அனைத்தையும் கூறினார். பங்குத் தந்தை அவரை லிப்ஸிகோவா என்ற பக்தியுள்ள பெண்மனியின் பராமரிப்பில் விட்டார். பவுஸ்தினா பங்குத்தந்தையின் வழிகாட்டுதலின் பேரில் பல துறவற மடங்களின் அருட்சகோதரிகளைக் கண்டு பேசினார். ஆனால், பயனேதும் இல்லை. இறுதியாக இரக்கத்தின் அன்னையின் துறவற சபை தலைமை சகோதரியால் தனது துறவற ஆடைக்குரிய பணத்துடன் வந்தால் ஏற்றுக் கொள்ளப்படுவார் என்ற நிபந்தனையுடன் சம்மதம் பெற்றார். அந்த துறவற சபையைப் பற்றி எதுவும் தெரியாவிட்டாலும் இவை அனைத்திலும் இறை திருவுளம் இருப்பதையும் ஆண்டவரின் கரம் தன்னை வழி நடத்துகிறது என்பதையும் மட்டும் அவர் நன்கு அறிந்திருந்தார். ஒரு வருடத்திற்கு ஒரு வீட்டில் வேலை செய்து அதில் கிடைத்த பணத்தை சேமித்து, மடத்தின் தலைமை சகோதரியிடம் கொடுத்தார். தனது **21** வது வயதில் புனித பவுஸ்தினா துறவற சபையில் சேர்ந்தார்.

பின்னாளில், இறை இரக்கத்தின் பக்தி, ஆண்டவர் இயேசுவால் புனித பவுஸ்தினா வழியாகவே தரப்பட்டது. எண்ணற்ற அருள் வரங்களின் ஊற்றாக விளங்கும் இந்த பக்தி முயற்சியை பலவித போராட்டங்கள், துன்பங்கள், உடல் நோய்கள் மத்தியிலும் முன்னெடுத்துச் சென்று இறைவனின் மாபெரும் கொடையை மனுக்குலம் அடைய உதவி செய்தார். இறைவனின் இரக்கத்தை இவ்வுலகம் பெற உதவியதன் மூலம் புனித பவுஸ்தினா இன்னொரு சீமோனாய் திகழ்கிறார். இயேசுவின் குரலுக்கு உடனே கீழ்ப்படிந்து, தடைகள் பல வரும் என்ற போதும், பலவித துறவற சபைகளால் புறக்கணிக்கப்பட்ட போதும், அது இறைத் திருவுளம் என்று ஏற்று தொடர்ந்து தன் அழைத்தலுக்காய் உழைத்தார். இவை எதிலும் அவர் மனம் தளர்ந்து போகவில்லை. மாறாக எல்லவற்றிலும் இயேசுவுக்கு உதவுவதில் உறுதியாக இருந்தார்.

**செபம்:** இயேசுவே, துறவற வாழ்வுக்கான விருப்பத்தோடு இருக்கும் இளையோர் அனைவரையும் அவரது பெற்றோர்களையும் ஒப்புக் கொடுக்கிறோம். இது உமது திருவுளம் என்பதை உணர்ந்து, ஏற்று உறுதியுடன் தங்கள் துறவற அழைத்தலில் முன்னேறிச் செல்லவும், தங்கள் துறவற வாழ்வில் வரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளவும், உம் அன்பிற்காகவும், ஆன்மாக்களின் மீட்பிற்காகவும் தங்களை முழுமையாய் அர்ப்பணித்து வாழவும் அருள்தாரும். தங்கள் தியாக வாழ்வால் பிறருக்கு ஒரு சீமோனாய் வாழ உதவியருளும். ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும், இயேசுவே, எங்கள் மேல் இரக்கமாயிரும்
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் .........

**ஆறாம் நிலை:** வெரோணிக்கா இயேசுவின் முகத்தை துடைக்கிறாள்

***ஒரு:*** திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து .......
***எல்:*** ஏனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு ........

**இறைவார்த்தை:** பிள்ளைகளே, நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம். (1 யோவான் 3:18)

**சிந்தனை: புனித எகிப்து மரியாள்**

எகிப்து நாட்டு புனித மரியாள், நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தனது பன்னிரண்டாவது வயதில் வீட்டை விட்டு வெளியேறினார். மனம் போன போக்கில் வாழ்ந்து பாவத்தில் வீழ்ந்தார். அந்த அசுத்தமான பாவ வாழ்க்கையில் பதினேழு ஆண்டுகள் கழிந்தன ஒரு முறை எருசலேமுக்குச் செல்லும் திருப்பயணிகள் கூட்டத்தைக் கண்டார். திருச்சிலுவை விழாவிற்கான அக்கூட்டத்தில் தனக்கு வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள் என்ற எண்ணத்தில் அக்கூட்டத்தோடு பயணம் செய்தார். திருச்சிலுவை திருநாள் அன்று திருச்சிலுவை திருப்பண்டத்தை முத்தி செய்வதற்கு திருப்பயணிகளோடு அவளும் கோயிலுக்குள் செல்ல முற்பட்டாள். ஆனால், கோவிலுக்குள் நுழைய முடியாத படி யாரோ தன்னை வெளியே தள்ளுவதை உணர்ந்தாள். மீண்டும் மீண்டும் முயற்சித்தும் அவளால் கோவிலுக்குள் நுழைய முடியவில்லை. அவமானத்தோடும் வருத்தத்தோடும் கோவிலின் வெளிப்புறத்திலேயே அமர்ந்தாள். அப்போது அங்கிருந்த மரியன்னையின் திருவுருவத்தைக் கண்டு, தான் ஆலயத்தில் நுழைய முடியாததற்கு தனது பாவ வாழ்வே காரணம் என்று உணர்ந்து, உண்மையான மன வருத்தத்தோடு அன்னையிடம் அழுது மன்றாடினாள். மீண்டும் ஆலயத்தில் நுழைய முயன்ற போது எவ்விதத் தடையுமின்றி நுழைய முடிந்தது. அதன் பிறகு மனம்மாறி அன்னை மரியாளின் வழிகாட்டுதலின் படி தவ வாழ்வு வாழ பாலைவனம் நோக்கிப் பயணமானாள். செல்லும் வழியில் புனித திருமுழுக்கு யோவானின் துறவற சபையின் ஆலயத்தைக் கண்டு செபிக்கச் சென்றாள். அங்கேயே திருமுழுக்கு, ஒப்புறவு மற்றும் நற்கருணை அருட்சாதனங்களைப் பெற்றாள். அங்கிருந்து தொடர்ந்து பயணம் செய்து பாலைவனத்தை அடைந்தாள்.

யாரும் அறியாமல் 47 ஆண்டுகள் அங்கே கடும் தவம் புரிந்து வாழ்ந்து வந்தாள். பின்னர், இறைத்திட்டப்படி, ஒரு தவக் காலத்தில் அங்கு வந்த அருட்திரு ஜோமியுஸ் அடிகளாரைக் கண்டாள். அவர் தனது காலத்தை அந்த பாலைவனத்தில் கழிக்க வந்தவர். அவர் அவளை அங்கே கண்டு வியந்து அவளைப் பற்றி கேட்டறிந்தார். எகிப்து மரியாளின் விருப்பத்தின் படி அந்த ஆண்டு பெரிய வியாழன் அன்று திருப்பலி நிறைவேற்றி நற்கருணை வழங்கினார். அவர் அங்கிருந்து புறப்பட்டபோது அடுத்த ஆண்டும் அதே நாள் தன்னை வந்து சந்திக்கும் படி கேட்டுக்கொண்டாள். அவ்வாறே அவர் அடுத்த ஆண்டு அவளைச் சந்திக்க

அங்குச் சென்ற போது எகிப்து மரியாள் இறந்திருப்பதையும் அவள் அருகில் சென்ற ஆண்டு அவர் நற்கருணை வழங்கிய பெரிய வியாழன் அன்றே அவள் இறந்ததாகவும் எழுதப்பட்ட ஒரு குறிப்பையும் கண்டார். இறந்து ஓராண்டு ஆன பின்பும் அவளுடைய உடல் எவ்வித சேதமும் இன்றி இருந்தது அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது. பாலைவனத்தில் சிங்கம் ஒன்று தோண்டிய குழியில் அவளை அடக்கம் செய்தார். தனது பாவ வாழ்வினால் கறைபடிந்த இயேசுவின் முகத்தை பரிகார தவவாழ்வு வாழ்ந்து துடைத்து மற்றொரு வெரோணிக்கவாக மாறினாள்.

**செபம்:** இயேசுவே, உலக கவர்ச்சிகளாலும், சிற்றின்பங்காளாலும் கவரப்பட்டு எதுவும் பாவமில்லை என்ற மாயையில் சிக்கி பாவ வாழ்விற்குள்ளாக விழுந்து கொண்டிருக்கும் எம் இளைய சமுதாயத்தை இரக்கத்துடன் கண்ணோக்கும். எகிப்து மரியாளை பாவ வாழ்வை விடுத்து தூய வாழ்வு வாழச்செய்த உமது அருளினால் எம் இளையோரையும் நிரப்பும். தங்கள் பாவங்களுக்கான பரிகார வாழ்வால் இவர்களும் உம் முகத்தைத் துடைக்க உதவி செய்யும். ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும், இயேசுவே, எங்கள் மேல் இரக்கமாயிரும்
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் .........

**ஏழாம் நிலை:** இயேசு இரண்டாம் முறை தரையில் விழுகிறார்

***ஒரு:*** திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து .......
***எல்:*** ஏனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு ........

**இறைவார்த்தை:** நீர் அவர்களுக்குச் சொல்ல வேண்டியது, ‘‘ஆண்டவர் கூறுவது இதுவே; விழுந்தவன் எழுவதில்லையா**?** பிரிந்து சென்றவன் திரும்பி வருவதில்லையா**?** (எரேமியா **8:4**)

**சிந்தனை: புனித பவுல்**

அந்நாளில் உலகப் புகழ்பெற்ற தலைசிறந்த குருவாகிய கமாலியேலிடம் கல்வி பயின்று தனது யூத மதத்தின் மீது தீரா பற்று கொண்டு வாழ்ந்தவர் சவுல். அன்றைய காலக்கட்டத்தில் புதிதாக, வேகமாக பரவிய புதிய வழியைப் பின்பற்றிய, அதாவது இயேசுவைப் பின்பற்றியவர்களை எப்படியாவது களையெடுக்க வேண்டும் என்று சபதமேற்று அவர்களைக் கொன்று குவிக்கவும் தொடங்கினார். தமஸ்கு நகரில் உள்ளவர்களை சிறைபிடிக்க அனுமதி பெற்று அந்நகருக்கு பயணித்த போது இயேசுவை சந்தித்தார். ஆணவத்தில் இயேசுவையும் அவரைப் பின்பற்றியவர்களையும் எதிர்த்து குதிரையின் மீது சவாரி சென்ற சவுல் கீழே விழுந்தார். ஆனால், எழுந்த போது இயேசுவை அறிந்தவராய் அவருக்காக எல்லாவற்றையும் இழக்கவும், இறக்கவும் துணிந்த பவுலாய் எழுந்தார். எழுந்த பின்பு தான் விழுந்து கிடந்த சூழலுக்குள் மீண்டும் அவர் கடந்து செல்லவில்லை. இயேசுவையும் அவரைப் பின்பற்றியவர்களையும் எவ்வளவுக்காய் எதிர்த்து துன்புறுத்தினாரோ அவ்வளவுக்காய் இயேசுவை பின்பற்றவும் அவர்மீது கொண்ட பற்றுதலுக்காய் எல்லாவற்றையும் குப்பையென தூக்கி எறியவும் தயங்கவில்லை. வாழ்வில் விழுவது இயல்பு தான் ஆனால், எதனால் விழுந்தோம் யாரால் விழுந்தோம் என்று ஆராயாமல்; எதையும் எவரையும் தனது விழுதலுக்கு குறைசொல்லிக் கொண்டிருக்காமல். இயேசு ஒருவர் தான் தன்னை எழுப்ப வல்லவர் என்ற உணமையை உணர்ந்து அவரைப் பற்றிக் கொண்டு மீண்டும் எழுந்து புது வாழ்வு வாழ்ந்தார் புனித பவுல்.

**செபம்:** இயேசுவே, கடவுள் இல்லை, இருந்தாலும் தேவையில்லை, ஆன்மா இல்லை, விண்ணகம், நரகம் என்று ஏதும் இல்லை எனவே எப்படியும் வாழலாம் என்று இந்த உலகப் போக்கில் வாழ்ந்து வீழ்ந்து கிடக்கும் எம் இளைய சமுதாயத்தை உம்மிடம் ஒப்படைக்கிறோம். இளையோர் தங்கள் வாழ்வை மாசற்றதாய் காத்துக்கொள்வது உமது வார்த்தையின் படி வாழும் வாழ்வே (திருப்பாடல் 119:9) என்பதை உணர்ந்து, உம்மீதுள்ள நம்பிக்கையே வாழ்வின் நங்கூரம் என்ற உண்மையை தங்கள் உள்ளத்தில் பதித்து, தவறான உலக போதனைகளில் விழுந்துகிடக்கும் நிலையிலிருந்து எழுவதற்கு எம் இளையோருக்கு உதவி செய்யும். இவ்வுலக வாழ்விலிருந்து எழுந்து உம்மில் உறுதியான பற்று கொண்டு வாழ்ந்த புனித பவுலைப் போல தாங்களும் எழுந்து பிறரும் எழுவதற்கு உதவுபவர்களாய் எம் இளையோர் வாழ உம் அருளைப் பொழிந்தருளும். ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும், இயேசுவே, எங்கள் மேல் இரக்கமாயிரும்
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் ........

**எட்டாம் நிலை:** இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் சொல்கிறார்.

***ஒரு:*** திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து .......
***எல்:*** ஏனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு ........

**இறைவார்த்தை:** உன் தாயை மதித்து நட. அவள் வாழ்நாள் முழுவதும் அவளைக் கைவிடாதே. அவளுக்கு விருப்பமானதைச் செய்; எவ்வகையிலும் அவளது மனத்தைப் புண்படுத்தாதே. (தோபித்து 4:3)

**சிந்தனை: புனித அகுஸ்தினார்**

சிறந்த அறிவாற்றலாலும் பேச்சுத்திறமையினாலும் பெருமை கொண்டு பலவித சிற்றின்ப நாட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி பாவ வாழ்வு வாழ்ந்தவர் புனித அகுஸ்தினார். இத்தைய பாவ வாழ்வு வாழ்ந்த தன் மகனுக்காக அவருடைய தாய் மோனிக்கம்மாள் கண்ணீரோடும் தியாகத்தோடும் தனது மகனை ஒரு நல்ல மனிதனாகவாவது மாற்ற வேண்டும் என்று இறைவனிடம் இடைவிடாது மன்றாடினாள். அதன் பலனாய் ஞானமும் இறை நம்பிக்கையும் நிறைந்து திருச்சபையின் மீது அதீத பற்று கொண்ட ஆயர் புனித அம்புரோசியாரின் போதனைகளால் கவரப்பட்டார். ஒரு முறை தன்னுடைய மனதில் கலக்கமும் குழப்பமும் நிறைந்தவராய் அருகிருந்த தோட்டத்திற்குள் சென்று அழுதபோது ‘‘எடுத்து வாசி’’ என்ற குரலைக் கேட்டு விவிலியம் இல்லாத அந்தக் காலத்தில் எப்போதும் தன்னுடன் அவர் வைத்திருந்த புனித பவுலடியாரின் கடிதத் தொகுப்பைத் திறந்தார். உரோமையருக்கு எழுதிய கடிதம் 13: 14 அவர் கண்களில் பட்டது. ‘பகலில் நடப்பது போல் மதிப்போடு நடந்து கொள்வோமாக! களியாட்டம், குடிவெறி, கூடா ஒழுக்கம், காமவெறி, சண்டைச் சச்சரவு ஆகியவற்றைத் தவிர்ப்போமாக! தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். இயேசு கிறிஸ்துவை அணிந்துகொள்ளுங்கள்.’ என்ற இறைவார்த்தையால் தொடப்பட்டார். தனது பாவங்களுக்காய் மனம் வருந்தி புது வாழ்வு வாழத்தொடங்கினார். பின்னாளில் ஒரு குருவாகி, ஆயராகி தூய மூவொரு இறைவனைப் பற்றியும் திருச்சபையைப் பற்றியும் இன்னும் பல சிறந்த நூல்களை எழுதி ஒரு புனிதராய், இறை வல்லுனராய் மாறினார். தன் பிள்ளைக்காக ஏறக்குறைய பதினேழு ஆண்டுகள் மனந்தளராமல் சலிப்பின்றி மோனிக்கம்மாள் அழுது செபித்ததன் பலன் மனந்திரும்பிய மைந்தன் மட்டுமல்ல, குருவான, ஆயரான, புனிதரான ஒரு மகன்.

**செபம்:** இயேசுவே, இன்றைய எங்கள் இளைய சமுதாயம் இவ்வுவலகப் போக்கில் தங்கள் வாழ்ந்து திருவழிபாடுகளிலும் உம் வார்த்தையை வாசிப்பதிலும் கேட்பதிலும் ஆர்வமின்றி வாழும் நிலையைக் காண்கிறோம். இத்தகைய வாழ்வினால் தங்கள் பெற்றோரின் கண்ணீருக்கு காரணமாகியும் அதைக் கண்டு கொள்ளாமலும் கவலை கொள்ளாமலும் வாழ்கின்றார்கள். சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் தவறான வாழ்வைத் தெரிந்தும் அதைப் பொருட்படுத்தாமல் வாழும் நிலையும் உள்ளது. தங்கள் பிள்ளைகளுக்காய் புனித மோனிக்கம்மாளைப் போல கண்ணீரோடு செபிக்கும் மனநிலையைத் தாரும். இளையோரும் தங்கள் தவறான வாழ்வால் பெற்றோருக்கு பாராமாயும் அவர்கள் கண்ணீருக்குக் காராணமாயும் இராதவாறும் உம் வார்த்தையின் படி நல்வாழ்வு வாழ அருள்தாரும். ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும், இயேசுவே, எங்கள் மேல் இரக்கமாயிரும்
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் .........

**ஒன்பதாம் நிலை:** இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்

***ஒரு:*** திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து .......
***எல்:*** ஏனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு ........

**இறைவார்த்தை:** அவர் உன் குற்றங்களை எல்லாம் மன்னிக்கின்றார். அவர் உனக்குப் பேரன்பையும் இரக்கத்தையும் மணிமுடியாகச் சூட்டுகின்றார். (திருப்பாடல் 103:3ஆ, 4அ)

**சிந்தனை: வணக்கத்திற்குறிய பர்த்தலோ லோங்கோ**

வணக்கத்திற்குறிய பர்த்தலோ லோங்கோ, சகோதரர் செபமாலை என்றும் அழைக்கப்படுகிறார். பக்தியுள்ள கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்து வளர்ந்த இவர், தனது கல்லூரி நாட்களில் தனது கத்தோலிக்க விசுவாசத்திலிருந்து தடம் புறண்டார். நல்ல கிறிஸ்தவராக வாழ்ந்த இவர், திருத்தந்தை எதிர்ப்பாளராக மாறினார், நாத்திகரானார். பின்னர், சாத்தான் சபையில் சேர்ந்து சாத்தானின் குருவானார். பர்த்தலோவின் குடும்பத்ினரும் நண்பர்களும் மனம் தளராது அவருக்காக செபித்து வந்தனர்.

அவரது சொந்த ஊரைச் சேர்ந்த ஒரு பேராசிரியர் அவரைக் கண்டு அவரோடு பழகி, மெல்ல மெல்ல அவரது தப்பறைகளில் இருந்து அவரை வெளியே கொண்டு வந்தார். மேலும், புனித சாமிநாதர் சபையைச் சார்ந்த அருள்திரு ஆல்பர்ட் என்பவரும் அவரை வழி நடத்தினார். அந்த அருள்தந்தையின் வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்தலின் பயனாய் பர்த்தலோ மீண்டும் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்தார். தனது அதிபயங்கர தப்பறைகளுக்காக பரிகாரம் செய்யத் தீர்மானித்தார். ‘‘எனது செபமாலை பக்தியை பரப்புவோர் காப்பாற்றப்படுவர்’’ என்ற மரியன்னையின் வாக்குறுதியை நினைவு கூர்ந்தார். அதை செயல்படுத்த சிறிய செபமாலை குழுக்களை பொம்பேயி என்ற ஊரின் புனித செபமாலை அன்னை ஆலயத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஆரம்பித்தார். அந்த ஆலயத்தை பழுதுபார்த்தார். அங்கு வந்த திருப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவே புதிய ஆலயம் ஒன்றைக் கட்டினார். செபமாலையின் ஆற்றலுக்கும், மரியன்னையின் வல்லமைக்கும் ஒரு உன்னத சாட்சியாகத் திகழ்ந்தார். கத்தோலிக்க நம்பிக்கைகெதிரான தப்பறைகளில் விழுந்து எழுந்த பின் ‘‘மரியன்னையிடம் உங்கள் நம்பிக்கையை விழித்தெழச் செய்யுங்கள்.’’ ‘‘மிகுந்த வணக்கத்துகுறிய அன்னயே, என் துன்பங்களையும் நம்பிக்கையையும் உம்மிடம் வைக்கிறேன்’’ என்கிறார் வணக்கத்துகுறிய பர்த்தலோ லோங்கோ.

**செபம்:** இயேசுவே, தாங்கள் செய்த பாவங்களால் குற்ற உணர்ச்சிக்கு உள்ளாகி, இனி எவ்வித நம்பிக்கையும் எதிர்காலமும் இல்லை என்ற விரக்தியில் விழுந்து கிடக்கும் எம் இளையோரை உம்மிடம் ஒப்புக் கொடுக்கிறோம். ஆண்டவரே, 'உம் பேரன்பு ஒரு போதும் முடிவுறவில்லை, உம் இரக்கம் தீர்ந்து போவதில்லை' (புலம்பல் 3:22-23) என்பதை உணர்ந்து, 'ஆண்டவரைத் தேடுவோர்க்கு அவர் நல்லவர்' (புலம்பல் 3:25) என்ற இறை வார்த்தையில் நம்பிக்கை கொண்டு, எழுச்சி கொண்டு வாழ்வை எதிர்கொள்ள அருள்தாரும். ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும், இயேசுவே, எங்கள் மேல் இரக்கமாயிரும்
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் ..........

**பத்தாம் நிலை:** இயேசுவின் ஆடைகளை களைகிறார்கள்

***ஒரு:*** திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து .......
***எல்:*** ஏனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு ........

**இறைவார்த்தை:** அவமானத்திற்குப் பதிலாக நீங்கள் இருபங்கு நன்மை அடைவீர்கள்; அவமதிப்புக்குப் பதிலாக உங்கள் உடைமையில் மகிழ்வீர்கள். (எசாயா 61:7) மானிடரின் நிந்தைக்கு அஞ்சாதீர்கள்; அவர்தம் இழிசொல் கேட்டுக் கலங்காதீர்கள். (எசாயா 51:7அ)

**சிந்தனை: புனித குபர்தினோ சூசை**

இத்தாலி நாட்டில் உள்ள குபர்தினோ என்னும் சிற்றூரைச் சார்ந்தவர். இளமை முதல் அறிவில் குறைந்தவாராய் இருந்ததினால் தனது தாயாராலேயே ஒரு தொல்லையாக, அவமானமாகக் கருதப்பட்டு கடுமையாக நடத்தப்பட்டார். நினைவு மறதி காரணமாக பல நேரங்களில் தனது வீட்டுக்குக் கூட வழி தெரியாமல் அலைந்தவர். படிக்க முடியாததால் செருப்பு தைக்க அனுப்பப்பட்டார். அதையும் அவரால் சரியாகச் செய்ய முடியவில்லை. கப்பூச்சின் துறவற சபையில் சேர்ந்து குருவாக விரும்பினார். அவரது அறிவாற்றல் குறைபாடு, திறமை இன்மை ஆகியவற்றால் எட்டு மாதங்களிலேயே வெளியே அனுப்பப்பட்டார். வீடு திரும்பிய அவரை தன்னுடன் வைத்துக்கொள்ள விரும்பாத அவரது தாயார், அந்த துறவற மடத்திலேயே ஒரு வேலையாளாக சேர்த்துக் கொள்ளும் படி செய்தார். அவர் அணிந்து கொள்வதற்கு துறவிகள் அணிந்து கொள்ளும் ஆடையே வழங்கப்பட்டது. ஆனால், அவரது வேலை கழுதைகளைப் பராமரிப்பது. இருப்பினும் அவர் மரியன்னையின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தார். அன்னை மரியும் அவருக்கு ஏராளமான அருள்வரங்களைப் பெற்றுத் தந்தார்.

இதனால் விரைவிலேயே அவர் பிரான்சிஸ்கன் சபை துறவியாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். படிப்பறிவில் குறைந்தவர் ஆனாலும் மரியன்னை மீது அவர் கொண்டிருந்த பக்தி அவரை குருத்துவ திரு நிலைப்பாட்டிற்கு உயர்த்தியது. குருவான பிறகு அவரது வாழ்வில் பல அரும் செயல்கள் வெளிப்பட்டன. அவற்றுள் முதன்மையானது அவரது பறக்கும் வரம். மரியன்னையின் பெயரை உச்சரித்தாலே போதும் அவர் பறக்க ஆரம்பித்துவிடுவார். திருப்பலி நேரங்களில் அவர் பலமுறை ஆலயத்தின் மேற்கூரை வரை மேலே எழும்பியதை மக்கள் கண்டனர். அவரது நோய் நீக்கும் வரத்தினாலும் பலர் நலமடைந்தனர். அவர் தனது புதுமைகளால் எவ்வளவு தேடப்பட்டார் என்றால், அவரது சபையினர் அவரை ஒளித்து வைத்தாலொழிய அவருக்குத் தனிமையும் ஓய்வும் கிடைக்கவில்லை. அறிவிலி, முட்டாள் எதற்கும் பயனற்றவன் என்று பெற்ற அன்னையாலேயே ஒதுக்கப்பட்ட குபர்தினோவின் சூசை, தான் அடைந்த அவமானங்களுக்கு பதியாக இருமடங்கு மட்டுமல்ல, பல மடங்கு அதிக நன்மையை பெற்றுக் கொண்டார்.

**செபம்:** இயேசுவே, தன்னால் எதுவும் இயலாது, எனக்கு எந்தத் திறமையும் இல்லை, நான் எதற்கும் பயனற்றவன் என்ற தாழ்வு மனப்பன்மையுலும் தோல்வி மனப்பான்மையிலும் அவமானத்தினால் கூனி குறுகி வாழும் எம் இளையோரை கனிவுடன் கண்ணோக்கும். மூன்று முறை விழுந்தாலும் நீர் மீண்டும் எழுந்து நடந்தீர். திறமையின்மையின், அவமதிப்பின் மொத்த உருவமாகக் கருதப்பட்ட குபர்தினோவின் சூசையை நீர் பறக்கும் புனிதராக மாற்றினீர். தங்கள் குறைபாடுகளில் அல்ல, மாறாக, ‘இறந்தோரை வாழ்விப்பவரும் இல்லாததை தம் சொல்லால் இருக்கச் செய்கிறவருமாகிய’ (உரோமையர் 4:17) உமது வல்லமையில் நம்பிக்கை கொண்டு வாழவும் தங்கள் அவமானத்தில் உம்மை அணிந்துகொள்ளவும் வரம் தாரும். ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும், இயேசுவே, எங்கள் மேல் இரக்கமாயிரும்
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் ..........

**பதினோராம் நிலை:** இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்.

***ஒரு:*** திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து .......
***எல்:*** ஏனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு ........

**இறைவார்த்தை:** மனிதர்கள் உங்களை யூதச் சங்கங்களிடம் ஒப்புவிப்பார்கள். தங்கள் தொழுகைக் கூடங்களில் உங்களைச் சாட்டையால் அடிப்பார்கள். என் பொருட்டு ஆளுநர்களிடமும் அரசர்களிடமும் உங்களை இழுத்துச் செல்வார்கள். (மத்தேயு 10:17-18ஆ)

**சிந்தனை: புனித செபஸ்தியார்**

கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த மறைசாட்சி புனித செபஸ்தியார், உரோமப் பேரரசன் தியோக்லேசியனின் படையில் ஒரு தளபதியாய் இருந்தார். தியோக்லேசியன் ஆட்சியில் நடந்த வேதகலாபனையில் அவன் கிறிஸ்துவர்களைத் துன்புறுத்தி கொன்று குவித்து வந்தான். அதனால் அவர் தன்னை ஒரு கிறிஸ்தவர் என்பதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை. செபஸ்தியார் படையில் சேர்ந்ததன் நோக்கமே துன்புறுத்தப்படுகிற கிறிஸ்தவர்களைப் பாதுகாக்கவே. ஒரு வேளை அவர்கள் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டால், அவர்கள் தங்கள் விசுவாசத்தைக் கைவிடாதபடி அவர்களுக்கு உதவி செய்து ஊக்குவித்து வந்தார். சுரங்க குகைகளில் கூடி செபிக்க வந்த கிறிஸ்தவர்களையும் பாதுகாத்து வந்தார். அவரது காலத்தில் வாழ்ந்தவர்களில் அவரால் வழி நடத்தப்பட்டு மறைசாட்சி மணிமுடி பெற்று உயர்த்தப்பட்டவர்களில் சிலர் தான் புனித பங்கிராஸ், புனித ஆக்னஸ், புனித பபியோலா, பார்வையற்ற புனித செசீலி, புனித மார்சலீனூஸ், மற்றும் புனித் மார்கஸ் ஆகியோர்.

செபஸ்தியார் ஒரு கிறிஸ்தவர் என்று அறிய வந்த தியோக்லேசியன் அவரை தனது கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டு விடும் படி அறிவுறுத்தினான். ஆனால், அவர் கிஸ்துவின் மீதுள்ள அன்பினால் மறுத்துவிட்டார். இதனால் அவன் கோபம் கொண்டு சாகும் வரை செபஸ்தியாரை அம்பெய்து கொல்லக் கட்டளையிட்டான். அவ்வாரே அவரை ஒரு மரத்தில் கட்டி அம்பெய்த வில் வீரர்கள் அவர் இறந்துவிட்டதாகக் கருதி அப்படியே அங்கேயே விட்டுச் சென்றனர். குற்றுயிராய்க் கிடந்த அவர் ஒரு பக்தியுள்ள பெண்மணியால் காப்பாற்றப்பட்டார். உடல் நலம் பெற்றவுடன் அவர் அரசன் முன் சென்று கிறிஸ்தவர்களை கொன்று குவித்த அவரது செயலை வன்மையாய் கண்டனம் செய்தார். அவரை உயிரோடு கண்ட தியோக்லேசியன் தன் கண் முன்னே அவர் சாகும் வரை தடியால் அடிக்கக்

கட்டளையிட்டான். தன்னுடைய விசுவாசத்திற்காய் மட்டுகின்றி பலரது விசுவாசத்தைக் காத்துக் கொள்ள உதவியது மட்டுமன்றி சிறையிலிருந்த பலர் மறைசாட்சியாய் மரிக்க அவர்களை ஊக்கப்படுத்தி உற்திபடுத்திய அவர் ஒரு இளைஞர்.

**செபம்:** இயேசுவே, தங்கள் நம்பிக்கையைத் தளரச் செய்யும் பல்வேறு சூழல்களில் சிக்கித்தவிக்கும் எம் இளைஞர் மற்றும் இளம் பெண்களை உம்மிடம் ஒப்படைக்கிறோம். எல்லாவித கடினமான சூழல்களிலும் உம் அன்பை உணர்ந்து உம்மில் உறுதியான நம்பிக்கை கொண்டு, தங்களுடைய உயிருள்ள விசுவாச வாழ்வினால் அவர்களைச் சுற்றியுள்ள பலரையும் புனிதமாக்க உதவி செய்ய வரம் தாரும். இவ்வுலகிற்கு ஒளியாகவும் உப்பாகவும் இருந்து திருச்சபையைக் கட்டி எழுப்ப அவர்களுக்குத் தேவையான அருள் வரங்களைத் தர வேண்டி உமது திருக் காயங்களுக்குள்ளாக அவர்களை ஒப்புக் கொடுக்கிறோம். ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும், இயேசுவே, எங்கள் மேல் இரக்கமாயிரும்
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் ……….

**பன்னிரண்டாம் நிலை:** இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்.

***ஒரு:*** திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து …….
***எல்:*** ஏனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு ……..

**இறைவார்த்தை:** கிறிஸ்துவின் இரத்தம், வாழும் கடவுளுக்கு நாம் வழிபாடு செய்யுமாறு, சாவுக்கு அழைத்துச் செல்லும் செயல்களிலிருந்து நம் மனச்சான்றை எத்துணை மிகுதியாய்த் தூய்மைப்படுத்துகிறது! ஏனெனில், என்றுமுள்ள தூய ஆவியினால் தம்மைத்தாமே கடவுளுக்கு மாசற்ற பலியாகக் கொடுத்தவர் அவரே. (எபிரேயர் **9**:**14**)

**சிந்தனை: வணக்கத்துக்குரிய கார்லோ அக்யூட்டிஸ்**

**1991** ஆம் ஆண்டு பிறந்த வணக்கத்துக்குரிய கார்லோ அக்யூட்டிஸ் ஒரு கணிப்பொறி வித்தகர். இக்காலத்திய மற்ற இளைஞர்களைப் போலவே துடிப்பும் உற்சாகமும் நிறைந்த பல நண்பர்கள் அவருக்கு உண்டு. பதினைந்து ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த இந்த இருபத்தியோராம் நூற்றாண்டு இளைஞர் தனது ஏழாவது வயதில் புது நன்மை வாங்கிய நாள் தொடங்கி தன்னால் நடக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்படும் நாள் வரை தினசரி திருப்பலிக்குச் செல்ல தவறியதில்லை. திருப்பலிக்கு முன்னரோ அல்லது பின்னரோ நற்கருணை முன்பு தனியாக செபிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அதுமட்டுமல்லாமல் தினமும் தவறாமல் செபமாலை சொல்வார். ‘என் வாழ்க்கையின் ஒரே பெண்மணி, முதல் பெண்மணி மரியன்னை மட்டுமே’ என்று அடிக்கடி சொல்வார். யாரும் கற்றுத் தராமலேயே கணிணி சார்ந்த பலவற்றில் திறமையும் அறிவும் கொண்டிருந்தார். கணிணி மென்பொருள் அமைப்பு, படங்கள் தணிக்கை செய்தல், வலைத் தளம் அமைத்தல், சிறு கணிணி பதிப்புகளை தணிக்கை செய்து வெளியிடுதல் இவற்றில் மிகத் திறமை வாய்ந்தவர் கார்லோ.

இந்தத் தறமைகளை அவர் நற்செய்தி பணிக்காகப் பயன் படுத்தினார். ஒரு தனி வலைத்தளம் அமைத்து திருச்சபயால் அனுமதிக்கப்பட்ட **134** பரிசுத்த தேவ நற்கருணை புதுமைகளை ஒரு வீடியோ நூலகமாக பதிவேற்றம் செய்தார். இதனிடையில் இரத்தப் புற்று நோயால் பாதிக்கப்பட்டார். இருப்பினும் தொடர்ந்து மரியன்னையின் திருக்காட்சிகளைத் தொகுத்து இன்னுமொரு வலைத்தளம் அமைக்க முயன்றார். ஆனால், அந்தப் பணியை முடிக்கும் முன்னரே தனது பதினைந்தாம் வயதில் விண்ணகம் சென்றார். தனது நோயையும் துன்பங்களையும் திருத்தந்தைக்காகவும் திருச்சபைக்காகவும் ஒப்புக்கொடுத்தார். ‘நான் இறப்பது எனக்கு மகிழ்ச்சியே. ஏனெனில், நான் என் வாழ்வில் ஒரு நொடி கூட இறைவனுக்கு

விருப்பமில்லாதவற்றைச் செய்து நேரத்தை வீணாக்கவில்லை. இயேசுவோடு எப்போதும் ஒன்றித்திருப்பதே என் வாழ்வின் ஏக்கம்' என்றார் கார்லோ.

**செபம்:** இயேசுவே, எங்கள் இளைய சமுதாயத்திற்கு அளவில்லாத புதுப்புது திறமைகளை அளித்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். அவர்கள் தங்கள் திறமைகளை அழிந்து போகும் இவ்வுலக செல்வத்திற்காக, பெருமை புகழ்ச்சிகளுக்காக பயன்படுத்தி தங்கள் ஆன்மாவை இழந்து போகாமல், கடவுளின் அரசைக் கட்டி எழுப்பவும், ஆன்மாக்களின் மீட்புக்காகவும் திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் பயன் படுத்தி அன்பான, அமைதியான, மகிழ்வான உலகை அமைக்க அவர்களுக்கு அருள்தாரும். ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும், இயேசுவே, எங்கள் மேல் இரக்கமாயிரும்
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் .........

**பதிமூன்றாம் நிலை:** இயேசு தன் தாயின் மடியில் கிடத்தப்படுகிறார்.

***ஒரு:*** திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து .......
***எல்:*** ஏனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு ........

**இறைவார்த்தை:** எல்லோருக்கும் மேலாக, அந்தத் தாய் மிகவும் போற்றுதற்குரியவர், பெரும் புகழுக்குறியவர் .......... ஆண்டவர் மீது கொண்டிருந்த நம்பிக்கையால் அவை அனைத்தையும் மிகத் துணிவோடு தாங்கிக் கொண்டார். ‘‘இறைவனின் இரக்கத்தால் உன் சகோதரர்களோடு உன்னையும் நான் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி இப்போது சாவை ஏற்றுக்கொள்.’’ (2 மக்கபேயர் 7:20, 29அ)

**சிந்தனை: திருத்தூதர் புனித யோவான்**

புனித யோவான் இயேசுவின் திருத்தூதர்களுள் ஒருவர். திருத்தூதர்கள் அனைவரிலும் இளையவர். ஒரு நற்செய்தியும், மூன்று கடிதங்களும், ஒரு திருவெளிப்பாட்டு நூலும் எழுதியவர். இவர் அன்பின் திருதூதர் என்றும் அழைக்கப்படுகிறார். தாம் இறக்கும் முன்பு இயேசு தன் தாயை இவரிடம் தான் ஒப்படைத்தார். இயேசுவால் மிகவும் அன்பு செய்யப்பட்டவர் இவர். கெத்சமனி தோட்டத்தில் தொடங்கி, கல்வாரி சிலுவையினடியில் தொடர்ந்து, இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படும் வரை உடனிருந்தவர். இயேசுவின் உடல் சிலுவையிலுருந்து இறக்கப்படும் போது இவரது தோள்கள் அவரது திரு உடலைத் தாங்கின. அன்னை மரியாள் இயேசுவின் இறந்த உடலைத் தமது மடியில் தாங்கும் முன் அவரைத் தன் கரங்களில் தாங்கியவர் யோவான். இயேவின் இறப்பிற்குப் பிறகு அவரால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அன்னை மரியாளை நம்பிக்கைக்குரியவராய் தன்னுடன் வைத்து அவள் இறக்கும் வரை பரிவுடன் பராமரித்துக் காத்து வந்தார்.

**செபம்:** இயேசுவே, எங்கள் இளைய சமுதாயத்திற்கு நீர் விடுக்கும் அழைப்பை உணர்ந்து ஏற்றுக் கொள்ளும் வரமருள உம்மை வேண்டுகிறோம். உலகத்தின் மதிப்பீடுகளோ, உறவினர், பெற்றோர் மற்றும் நண்பர்களின் உறவுப் பிணைப்புக்கள் இந்த இறையழைத்தலுக்கு தடையாய் இராதபடி உதவி செய்யும். புனித யோவானைப் போல, உம்மை அன்பு செய்ய, ஆறுதல் தர எங்கள் இளைய சமுதாயத்திற்கு உம் அருள்தாரும். நீர் உம் அன்னையை யோவானிடம் ஒப்படைத்தது போல இன்றைய இளையோரை நம்பி உமது திருச்சபையை ஒப்படைத்திருக்கின்றீர் என்பதை அவர்கள் உணர்ந்து உமது நம்பிக்கைக்கு உரியவர்களாய் திருச்சபையை பாதுகாக்க அவர்களுக்குத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும், இயேசுவே, எங்கள் மேல் இரக்கமாயிரும்
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் ........

**பதினான்காம் நிலை:** இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்.

*ஒரு:* திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து .......
***எல்:*** ஏனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு ........

**இறைவார்த்தை:** கிறிஸ்துவின் வருகையின் போது அவரைச் சார்ந்தோர் உயிர் பெறுவர். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக நமக்கு இந்த வெற்றியைக் கொடுக்கும் கடவுளுக்கு நன்றி. (1 கொரிந்தியர் 15:23அ, 57)

**சிந்தனை: புனித குழந்தை தெரசாள்**

புனித குழந்தை தெரசாள் தனது பதினைந்தாவது வயதில் கார்மேல் உள்ளிருப்பு துறவற மடத்தில் சேர்ந்தார். அங்கு ஒன்பது ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார். ஆனால், அவர் திருச்சபையினுடையவும், கார்மேல் சபையினுடையவும் மிகச் சிறந்த புனிதர்களுள் ஒருவராக கருதப்படுகிறார். அவரது ஆன்மீகம் ‘‘சிறிய வழி’’ என்று அழைக்கப்படுகிறது. ‘‘பெரிய காரியங்களை அல்ல, ஆனால், சிறிய காரியங்களின் மூலம் இயேசுவைக் கவர்ந்து கொள்ளவும், ஆன்மாக்களை மீட்கவும் நான் அழைக்கப்பட்டிருக்கிறேன்’’ என்று சொன்னார். தனது மரணப் படுக்கையில் இருக்கையில் அவர், ‘‘மண்ணகத்தில் நன்மை செய்வதிலேயே நான் என் விண்ணக வாழ்வைக் கழிப்பேன். இயேசுவுக்காக ஆன்மாக்களை சேகரிக்க நான் மீண்டும் உலகிற்கு வருவேன்’’ என்றார். அவர் மிகப் பெரிய வீர, தீர செயல்களோ, புதுமைகளோ எதுவும் செய்யவில்லை. தனிப்பட்ட வெளிப்பாடுகளோ, காட்சிகளோ அவருக்கு அருளப்படவில்லை. ஆனால், சிறு சிறு ஒறுத்தல் முயற்சிகளை - இவ்வுலகம் மதிக்காத, கவனிக்காத சில காரியங்களை - செய்ததன் மூலம் அவர் நிறைய ஆன்மாக்களை இயேசுவுக்காய் சேகரித்தார். ‘‘சிறிய ஒறுத்தல் முயற்சிகளைத் தேடி நாம் பொக வேண்டியதில்லை, ஆனால், அவை நம் வாழ்நாள் முழுவதும் நம் காலடியிலேயே கொட்டிக்கிடக்கின்றன’’ என்று தன் சகோதரி செலீனுக்கு எழுதினார். ‘‘இவற்றைச் சேகரிக்க நாம் கொஞ்சம் கவனம் செலுத்தினால் போதும், நாம் நிறைய சேகரிக்கலாம்’’ என்கிறார் சிறியவற்றைச் செய்து பெரிய புனிதையான குழந்தை தெரசாள்.

**செபம்:** இயேசுவே, எவ்வளவோ பெரிய இறைவனாய் நீர் இருந்தும், உலகனைத்தையும் உருவாக்கியிருந்தும், உலகமே உம்மைக் கொள்ள முடியாதிருந்தும், உம்மையே எளிமையாக்கி சிறியவர்கள் எங்களுக்காய் மனிதனாய் பிறந்து எங்களைப் போலவே எங்களில் ஒருவராய் வாழ்ந்து மரித்து ஒரு சிறிய கல்லரையில் உம்மையே எங்களுக்காய் சிறுமைப்படுத்திக் கொண்டீர். சாதாரன, எளிய, அமைதியான, அடக்கமானத் தோற்றத்தையும், வாழ்வையும் முட்டாள் தனம் என்று கருதி அவற்றைக் கைவிட்டு பெரிய, பகட்டான சாதனைகள் தான் வாழ்க்கை என்று கருதி கிடைக்கும் சிறிய, எளிய வாய்ப்புக்களைத் தவர விட்டுத் தங்கள் வாழ்வை வீணடிக்கும் எம் இளையோருக்காய் செபிக்கிறோம். நீர் இந்த உலகம் மடமை என்று கருதுபவற்றைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்ய வல்லவர் (1 கொரிந்தியர் 1:28) என்பதை எம் இளைஞர்களும் இளம் பெண்களும் உணர்ந்து, சிறியவற்றில் நம்பிக்கைகுரியவராய் இருப்போரையே நீர் பெரியவற்றுக்கு அதிகாரியாக்குவீர் (லூக்கா 16:10) என்ற உண்மையை உணர்ந்து வாழச் செய்தருளும். ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும், இயேசுவே, எங்கள் மேல் இரக்கமாயிரும்
மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் .......

இறுதி செபம்

விண்ணகத் தந்தையே! எங்களுக்காக சாவை ஏற்று உம்முடைய திருமகனை ஏற்றுக்கொண்டு எங்களுடைய பாவங்களைப் பொறுக்கவும், எங்களோடு ஒன்றுபடவும் செய்வீராக.

உம்முடைய திருக்குமாரன் கல்வாரியில் சிந்திய திரு இரத்தம் எங்களுக்காகப் பரிந்து பேசுகிறது. அந்தத் திரு இரத்தத்தை நினைத்து எங்கள் செபத்தை ஏற்றுக்கொள்ளும்.

எங்களுடைய பாவங்கள் பெரிதாகும் என்று நாங்கள் அறிகிறோம். எனினும், உம்முடைய கருணை அதனினும் பெரிது அன்றோ? எங்களுடைய பாவங்களை ஒழித்துவிட இயேவுவின் இந்தப் பரிகாரப் பலியை ஏற்றுக்கொள்ளும்.

எங்களுடைய பாவங்களின் நிமித்தம், உம்முடைய அன்பு மகன் ஆணிகளால் அறையப்படவும், ஈட்டியால் குத்தப்படவும் செய்தார். உம்முடைய அருளைப் பெற உம் அன்பு மகனின் பாடுகள் போதுமானது அன்றோ?

உம்முடைய புதல்வனை எங்களுக்கு அளித்த பரம தந்தையே, உமக்கு மகிமையும். சிலுவை மரணத்தால் எங்களை இரட்சித்த மகனுக்கு ஆராதனையும், இரட்சிப்பின் பலியை பூர்த்தியடையச் செய்த தூய ஆவியாருக்கு ஸ்தோத்திரமும் உண்டாகட்டும். ஆமென்.